بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *03/10/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹுனைன் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

ஹுனைன் போரில் கிடைத்த போர்ச் செல்வங்களும் அதன் பங்கீடும் குறித்து கூறப்பட்டு வந்தது. இது தொடர்பான இன்னும் பல சம்பவங்களும் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனைத்துப் போர்ச் செல்வங்களையும் ஜிஃரானா எனும் இடத்தில் ஒன்று திரட்டும்படி உத்தரவிட்டார்கள். பின்னர், அன்னார் தாயிஃபை நோக்கிப் பயணமானார்கள். ஏறத்தாழ ஒருமாத காலத்திற்குப் பிறகு தாயிஃபிலிருந்து ஜிஃரானாவிற்கு வந்தார்கள். இங்கு வந்த பின்னரும் அன்னார் போர்ச் செல்வங்களைப் பங்கீடு செய்யாமல், பனூ ஹவாஸின் குலத்தினர் தவ்பா செய்து திரும்பி வரக்கூடும் என்ற நம்பிக்கையில் சில நாட்கள் காத்திருந்தார்கள். இங்கோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களுக்காகக் காத்திருக்க, அங்கு பனூ ஹவாஸினோ, நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் செல்வது பயனுள்ளதாக இருக்குமா, இல்லையா என்ற குழப்பத்தில் இருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுமார் 13, 14 நாட்கள் காத்திருந்து போர்ச் செல்வங்களைப் பங்கீடு செய்துவிட்ட பிறகு, இஸ்லாத்தைத் தழுவியிருந்த பனூ ஹவாஸின் குலத்தைச் சேர்ந்த பதினான்கு பிரமுகர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, தங்கள் கோத்திரம் முழுவதுமே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக தெரிவித்தார்கள். அம்மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கருணைக்காக வேண்டியபோது, நான் உங்களது வருகைக்காகப் பல நாட்கள் காத்திருந்தேன்; அதன் பின்னரே போர்ச் செல்வங்களைப் பங்கீடு செய்தேன். இப்போது கைதிகளில் மிகச் சிலரே உள்ளனர்; மற்ற அனைவரும் பங்கிடப்பட்டு விட்டனர். எனவே, நீங்கள் இப்போது இரண்டு விஷயங்களில் ஒன்றை மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும். ஒன்று, பொருட்களையும் செல்வங்களையும் தேந்தெடுத்துக் கொள்ளுங்கள் அல்லது கைதிகளாக இருக்கும் ஆண்கள் பெண்கள் ஆகியோரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று அன்னார் கூறினார்கள். பனூ ஹவாஸின் குலத்தினர் கைதிகளாக இருக்கும் தமது ஆண்களையும் பெண்களையும் திரும்பப் பெற முடிவு செய்தனர். ஆகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ அப்தில் முத்தலிபிடம் இருந்த கைதிகளை உடனடியாகத் திருப்பி அளித்தார்கள். மீதமுள்ள கைதிகள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களுக்கு ஆலோசனையளிக்கும் போது, நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை முஸ்லிம்கள் முன்னிலையில் வெளிப்படுத்தி உங்களுக்காகப் பரிந்துரை செய்ய என்னை நியமியுங்கள் என்று கூறினார்கள். எனவே, அவ்வாறே செய்யப்பட்டது. இவ்வாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஈடு இணையற்ற இரக்க குணத்தின் காரணமாக பனூ

ஹவாஸின் குலத்தின் அனைத்துக் கைதிகளும் நல்ல முறையில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹவாஸின் குலத்தின் இந்தக் கைதிகளை எவ்வித ஈடும், இழப்பீடும் இன்றி விடுதலை செய்ததோடு மட்டுமல்லாமல், அவர்களுக்குப் புதிய ஆடைகளையும் வழங்கினார்கள். “அவர்களில் விடுதலை அடைந்த எவரும் புதிய ஆடை இல்லாமல் செல்லக் கூடாது” என்று வலியுறுத்திக் கூறினார்கள். இந்த உத்தரவின்படி, ஒவ்வொரு கைதிக்கும் புதிய ஆடை வழங்கப்பட்டது.

ஓர் அறிவிப்பின்படி, மூன்று நபர்கள் தங்கள் கைதிகளைத் திரும்பக் கொடுக்க மறுத்துவிட்டனர். வேறு சில அறிவிப்புகளின்படி, “பனூ ஹவாஸினின் அனைத்துக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவார்கள். யார் தன் கைதியை விடுதலை செய்ய விரும்பவில்லையோ அவருக்கு அதற்குப் பதிலாக பைத்துல் மாலிலிருந்து ஆறு இளம் ஒட்டகங்கள் ஈடாக வழங்கப்படும்” என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே, தங்கள் கைதிகளைக் கொடுக்கத் தயாராக இல்லாத அனைவரும் இதற்கு சம்மதித்துவிட்டனர். இவ்வாறாக, பனூ ஹவாஸினின் ஆறாயிரம் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

சில அறிவிப்புகளின்படி, உயைனா பின் ஹிஸ்ன் ஃபஸாரீ என்பவர் கீழ்ப்படியாமையின் காரணமாக கடும் அவமானத்தைச் சுமக்க நேர்ந்ததுடன், நன்மையிலிருந்தும் பரக்கத்திலிருந்தும் இழப்பிற்குரியவரானார். உயைனாவைத் தவிர மற்ற அனைவரும் தங்கள் கைதிகளைத் திரும்பக் கொடுத்துவிட்டார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டபோது, “அல்லாஹ் அவனுக்கு நஷ்டத்தை வழங்கட்டும்” என்று அன்னார் கூறினார்கள் என எழுதப்பட்டுள்ளது.

அவருடைய கைதி பற்றிய சம்பவம் என்னவெனில், அவர் இளம் பெண்ணுக்குப் பதிலாக ஒரு வயதான பெண்ணைக் கைதியாக எடுத்திருந்தார். காரணம், அப்பெண்ணுக்கு அதிக சந்ததிகள் இருந்தால் அவர் கேட்கும் ஈட்டுத்தொகை கிடைக்கும் என்று எண்ணினார். அந்த வயதான பெண்ணின் மகன் உயைனாவிடம் வந்து, நூறு ஒட்டகங்களுக்குப் பதிலாக தன் தாயை விடுதலை செய்யுமாறு கேட்டபோது, (ஈட்டுத்தொகை இன்னும் அதிகமாகலாம் என்ற) பேராசையின் காரணமாக உயைனா மறுத்துவிட்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு உயைனாவே அந்த மகனிடம் சென்று, நீ கொடுக்க விரும்பிய ஒட்டகங்களை இப்போது கொடுக்கிறாயா என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன், இப்போது நான் ஐம்பது ஒட்டகங்கள் மட்டுமே கொடுப்பேன் என்று கூறினார். உயைனா ஒரு தொகையைக் கேட்பார்; நான் அதையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று அந்த இளைஞர் கூறுவார். சரி, இவ்வளவு கொடுத்துவிடு என்று உயைனா கூறுவார். இவ்வாறு எண்ணிக்கை குறைந்து குறைந்து இறுதியில், இந்தக் கிழவியை என்னிடமிருந்து இலவசமாகவே அழைத்துச் சென்று விடு என்று சொல்லும் நிலைக்கு உயைனா ஆளானார். அதற்கு அந்த இளைஞன், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனைத்துக் கைதிகளையும் விடுதலை செய்ததோடு ஆடைகளையும் வழங்கினார்கள். இந்தக் கிழவிக்கு அது இல்லாமல் போய்விட்டது. அதனால், நீ அவளுக்கு ஆடையையும் கொடு என்று கூறினார். இறுதியில், உயைனாவுக்கு தன் போர்வையைக் கொடுக்க வேண்டியதாயிற்று. இவ்வாறாக, அந்த இளைஞன் அந்தக் கைதிப் பெண்ணை அழைத்துச் சென்றதோடு ஆடையையும் எடுத்துச் சென்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹவாஸின் குலத்தாரிடம் அவர்களின் தலைவர் மாலிக் பின் அவ்ஃப் பற்றி விசாரித்தபோது, அவர் தாயிஃபில் பனூ ஸகீஃப் குலத்தாருடன் இருப்பதாகத் தெரியவந்தது. அவர் தமக்கு கீழ்ப்படிந்தால் அவரது மனைவி மக்களும் அவரிடம் திரும்பக் கொடுக்கப்படுவார்கள் என்று அன்னார் அவருக்குச் செய்தி அனுப்பினார்கள். மாலிக் பின் அவ்ஃப் அன்னாரிடம் ஆஜரானபோது, அன்னார் அவருடைய மனைவி மக்களையும் அவரிடம் திரும்பக் கொடுத்து விட்டார்கள்; அத்துடன்,

நூறு ஒட்டகங்களையும் அன்பளிப்பாக வழங்கினார்கள். அன்னாரின் இந்த கொடையைக் கண்டு மாலிக் முஸ்லிம் ஆகிவிட்டார்.

பனூ ஹவாஸின் கைதிகளில் ஷைமா என்றொரு பெண்மணியும் இருந்தார். அவரது உண்மையான பெயர் ஹுஸாஃபா ஆகும். அவர் கைது செய்யப்பட்டபோது, நான் உங்கள் நபிக்கு பால் குடி உறவில் சகோதரி ஆவேன் என்று கூறினார். அதன் பேரில், அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் கொண்டு வரப்பட்டார். அவர், பால் குடி உறவுக்கு சான்றாக, 'நான் உங்களை என் மடியில் வைத்திருந்தபோது நீங்கள் கடித்த பற்களின் அடையாளம் இது' என்று காட்டினார். நாங்கள் அப்போது ஆடு மேய்த்துக் கொண்டிருந்தோம்; உங்கள் செவிலித்தாய், தந்தையர் என் உண்மையான தாய் தந்தையர் ஆவார்கள் என்றும் கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று அவருக்காகத் தம் போர்வையைக் கீழே விரித்து, இதில் உட்காருங்கள் என்று கூறினார்கள். அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அன்னார் அவரிடம் தம் செவிலித்தாய், தந்தையரைப் பற்றிக் கேட்டபோது, அவர்கள் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார். நீங்கள் இங்கு தங்க விரும்பினால் தங்கலாம்; திரும்பிச் செல்ல விரும்பினால் திரும்பிச் செல்லலாம் என்று கூறினார்கள். அதற்கான உரிமையை அன்னார் அவருக்கு வழங்கினார்கள். அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு திரும்பிச் செல்ல முடிவெடுத்தார். அன்னார் அவருக்கு மூன்று அடிமைகளையும், ஓர் அடிமைப் பெண்ணையும் வழங்கினார்கள். அவ்வாறே, ஒட்டகங்களையும் வழங்கினார்கள்.

அபூ தாவூதின் ஒரு பலவீனமான அறிவிப்பின்படி, ஜிஃரானா எனும் இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செவிலித் தாயும் அன்னாரைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அதன் அறிவிப்பாளர் தொடர் பலவீனமானதாக உள்ளது. செவிலித்தாயின் சந்திப்பு வேறு சந்தர்ப்பத்தில் நிகழ்ந்திருக்கலாம் அல்லது அறிவிப்பாளருக்குத் தவறு ஏற்பட்டிருக்கலாம் என்பது தெரியவருகிறது. ஏனெனில், அறிவிப்புகளின்படி, ஹுனைன் போருக்கு முன்பே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செவிலித் தாயார் இறந்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது, நூறு ஒட்டகங்கள் பரிசாக கிடைக்கும் என்ற பேராசையில் ஸுராகா பின் மாலிக் என்பவர் அன்னாரை பின்தொடர்ந்து வந்தார். அன்னார் அவருக்கு பாதுகாப்புப் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்திருந்தார்கள். அதே ஸுராகா அந்தப் பாதுகாப்புப் பத்திரத்துடன் ஜிஃரானாவிற்கு வந்து இஸ்லாத்தைத் தழுவினார்.

ஜிஃரானாவில் தங்கியிருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் இரவு உம்ரா செய்வதற்காக மக்காவிற்குச் சென்று அதே இரவே திரும்பி வந்துவிட்டார்கள். அன்னார் எங்கும் செல்லவில்லை என்று மக்கள் நினைத்துக் கொண்டார்கள். துல்கஅதா மாதத்தில் பன்னிரண்டு நாட்கள் மீதமிருந்த நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா திரும்புவதற்கான பயணத்தைத் தொடங்கி, ஒன்பது நாட்கள் பயணத்திற்குப் பிறகு மதீனா வந்தடைந்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேற்கத்திய ஆய்வாளர்களின் சில ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் அவற்றுக்கான சுருக்கமான பதில்களையும் எடுத்துரைத்தவாறு கூறும்போது, இவையனைத்தும் முன்பே விவரிக்கப்பட்டுவிட்டன என்று கூறினார்கள்.*

*இறுதியில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து அவர்களின் ஜனாஸா ஃகாயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

**கனடாவில் வசித்த மர்ஹூம் டாக்டர் லயீக் அஹ்மத் ஃபர்ருக் ஸாஹிப் அவர்கள்** பல ஆண்டுகள் தம் வாழ்வை அர்ப்பணித்த மருத்துவராக ஆப்பிரிக்காவில் தொண்டாற்றினார். பெரும் அர்ப்பணிப்பு உணர்வுடன் அவர் சேவை செய்தார். மர்ஹூம் அமைதியான இயல்புடையவர்; (எப்போதும்) துஆ செய்பவர்; பணிவும் தாழ்மை குணமும் கொண்டவர்; பொறுமை மற்றும் உறுதிக்கு உதாரணமாகத் திகழ்ந்தார். தன் முழு

வாழ்க்கையையும் மனித குலத்தின் சேவைக்கே அர்ப்பணித்தார். சாதகமற்ற சூழ்நிலைகளிலும் பெரும் உறுதியுடன் பணியாற்றினார்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* நானும் கானாவில் இருந்துள்ளேன்; அவருடன் காலத்தைக் கழித்திருக்கிறேன். அவர் மிகவும் நல்ல குணமுள்ளவர், பணிவுள்ளவர், சேவை செய்யும் மனிதராக இருந்தார். வாழ்வை அர்ப்பணித்தவர்களை மிகவும் மதிப்பவர். விருந்தோம்பல் அவரிடம் நிரம்பியிருந்தது. அவரும் அவரது மனைவியும் விருந்தோம்பல் குணம் மிக்கவர்கள். அவரிடம் இருந்த பல தனிச்சிறப்புகளை மிகக் குறைவான மக்களிடமே நாம் காண முடியும்.

**இரண்டாவது நற்குறிப்பு (இந்தியா) ஹைதராபாத்தைச் சேர்ந்த மதிப்புக்குரிய ஹமீத் அஹ்மத் ஃகவ்ரீ ஸாஹிப்** அவர்களைப் பற்றியதாகும். மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார். அவரது மறைவுக்குப் பின் அவரது மனைவி, ஒரு மகள், நான்கு மகன்கள் மற்றும் பேரப் பிள்ளைகள் உள்ளனர். அனைத்து பிள்ளைகளும் ஏதோ ஒரு விதத்தில் ஜமாஅத்திற்குச் தொண்டாற்றி வருகிறார்கள். மர்ஹூம், நாஸிர் அஃலா காதியான் ஆக இருக்கும் முஹம்மத் இன்ஆம் ஃகவ்ரீ ஸாஹிப் அவர்களின் தம்பி ஆவார். மேலும், ஜமாஅத்தின் முபல்லிக் ஆகவும் அல்பானியா ஜமாஅத்தின் தலைவராகவும் இருக்கும் ஸமத் ஃகவ்ரீ ஸாஹிப் அவர்களின் தந்தை ஆவார். நோன்பு, தொழுகை ஆகியவற்றைப் பேணக்கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், திருக்குர்ஆனின் மீது நேசம் கொண்டிருந்தவராகவும் இருந்தார். மர்ஹூமுக்கு ஹஜ் மற்றும் உம்ரா செய்யும் நற்வாய்ப்பும் கிடைத்திருந்தது. கிலாஃபத்திற்கு கட்டுப்படக் கூடியவராகவும், நல்லொழுக்கமுள்ள சான்றோராகவும் இருந்தார். பொருள் தியாகத்தில் முன்னணியில் இருந்தார். ஹோமியோபதி சிகிச்சையும் செய்து வந்தார். வீட்டில் அதிகமான அளவில் ஹோமியோபதி மருந்துகளும் வைத்திருந்தார். தேவைப்படுவோருக்கு மருந்துகளையும் இலவசமாக வழங்கி வந்தார். தலைமையக பிரதிநிதிகளுக்கும் முரப்பிகளுக்கும் மிகவும் மரியாதை செலுத்தி வந்தார்.

கிலாஃபத்தின் சிறிய மற்றும் பெரிய கட்டளைகள் அனைத்தின் மீதும் முதலில் அமல் செய்வார்; பிறகு ஜமாஅத்திற்கு எடுத்துரைப்பார். அல்லாஹ்வின் அருளால் இந்த முயற்சியில் வெற்றியும் பெற்றார். உறவு முறையை அதிகமாக பேணுபவராகவும், தன் உறவினர்களை அடிக்கடி வீட்டிற்கு அழைத்து அவர்களின் சுக, துக்கங்களில் பங்குபெறுபவராகவும் இருந்தார்.

நாயிப் அமீர் ஹைதராபாத் ஆகவும், செகரட்டரி தஃலீமுல் குர்ஆன் ஆகவும், தம் வட்டாரத்தின் ஸத்ர் ஜமாஅத் ஆகவும் இருந்துள்ளார். நாஸிம் அன்ஸாருல்லாஹ் ஆகவும், நாயிப் ஸத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் தென்னிந்தியா ஆகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்றுள்ளார். எவ்வாறிருப்பினும், போதுமான அளவு அவருடைய ஜமாஅத் தொண்டுகள் உள்ளன. ஒருமுறை அவர் இங்கும் மாநாட்டில் கலந்துகொண்டிருந்தார்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!. அவருடைய மகன் அல்பானியாவில் ஜமாஅத் முபல்லிக் ஆக இருப்பதால் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அவருக்கும் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக! நான் அவருடைய ஜனாஸா தொழுகையைப் பின்னர் தொழ வைப்பேன்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும் அந்தஸ்து உயர்வுக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ

وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي

الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)